**நீதித்துறை நடுவர் நீதிமன்றம், பழனி**

**C.C. 524 of 2012** **Previous Date : 23-06-2019**
**20-06-2022**

**அரசு சாட்சி 1 முத்துசாமி த/பெ.வீரன் சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டார். மனுவின் பேரில் மீண்டும் அழைக்கப்பட்டு எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை.**

**1,2 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:**

**1.** நான் என்ன படித்துள்ளேன் என்றால் 10 வகுப்பு படித்துள்ளேன். வழக்கின் புகாரை எங்கு வைத்து யார் எழுதினார் என்றால். மருத்துவனையில் வைத்து S.I எழுதினார். இந்த வழக்கின் சம்பவம் இரவு 11.00 மணியளவில் நடந்ததது என்றால் சரியல்ல. 9.00 மணி இருக்கும். இந்த வழக்கு சம்பந்தமாக போலிசார் என்னை எங்கு விசாரித்தார்கள் என்றால் மருத்துவமனையில் விசாரித்தார்கள். மருத்துவமனையில் விசாரித்ததை தவிர வேறு எங்கும் விசாரிக்கவில்லை என்றால் சரிதான். புகாரை நான் வாய்மொழியாக சொன்னேன் என்றால் சரிதான். அ.சா.2 செல்வம் எனது உடன் பிறந்த தம்பி என்றாலும் அ.சா.3 வீரன் எனது தகப்பனார் என்றாலும் சரிதான். இந்த வழக்கு சம்பவத்திற்கு முன்பு எனது சித்தப்பா மாரிமுத்து என்பவருக்கும், எங்கள் ஊரைச்சேர்ந்த வெள்ளைச்சாமி என்பவருக்கும் தொகுப்பு வீடு சம்பந்தமாக அளவீடு பிரச்சனை இருந்தது என்றால் சரிதான். அந்த அளவீடு சம்பந்தமான பேச்சு வார்த்தையின் தொடர்ச்சியாக தான் இந்த சம்பவம் நடந்துள்ளது என்றால் பேசியது வேறு இடத்தில் பேசிவிட்டார்கள் அதற்கு பிறகு எங்கள் வீட்டிற்கு வந்து பிரச்சனையானது.

2. வெள்ளைச்சாமிக்கும், மாரிமுத்துக்கும் பேச்சுவார்த்தை நடந்த போது அங்கு நாங்கள் இல்லையென்றாலும், அந்த பேச்சுவார்த்தையில் நாங்கள் கலந்துகொள்ளவில்லை என்றாலும் சரிதான். எதிரிகளின் வீடு எங்கள் வீட்டிலிருந்து எவ்வளவு துாரத்தில் உள்ளது என்றால் சுமார் 1 கி.மீ உள்ளது. நான் எத்தனை வருடங்களாக கோதைமங்களத்தில் வசித்து வருகிறேன் என்றால் எங்கள் குடும்பம் எனது தாத்தா காலத்திலிருந்து வசித்து வருகிறோம். எதிரிகள் எத்தனை வருடங்களாக கோதைமங்களத்தில் வசித்து வருகிறார்கள் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. போலிசார் பிரச்சனை சம்பந்தமாக விசாரிப்பதற்கு எனது வீட்டிற்கு வந்தார்களா என்றால்

ஆமாம் நான் மருத்துவமனையில் இருந்த போது எனது வீட்டில் சென்று விசாரித்துள்ளார்கள். பிரச்சனை நடந்ததாக சொல்லும் நேரத்தில் எனது வீட்டில் இருந்த பொருட்கள் எதுவும் சேதமானதா என்றால் ஆமாம், TV , பாத்திரம் மற்றும் வீட்டில் உள்ள பொருட்கள் சேதமடைந்தது. எனது வீட்டில் எந்த பொருட்களும் சேதமாகவில்லை என்றாலும், சேதமாகியிருந்தால் புகார் மனுவில் சொல்லியிருப்பேன் என்றால் சரியல்ல. எதிரிகளின் பெயர்களை யாரை விசாரித்து தெரிந்துகொண்டேன் என்றால் எதிரிளின் பெயர் எனக்கு தெரியும். நான் கொடுத்த புகார் வாக்குமூலத்தில் எதிரிகள் அசிங்கமாக பேசியதாக சொல்லி எந்த வார்த்தையும் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரியல்ல.

3. மருத்துமனையில் சிகிச்சைக்கு சேரும் போது மருத்துவரிடம் என்னை தெரிந்த 50 நபர்கள் வந்து தாக்கினார்கள் என்று சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். மருத்துவமனையில் நான் இருந்த போது எதிரிகள் எதுவும் பிரச்சனை செய்தார்களா என்றால் ஆமாம். நான் புகார் வாக்குமூலத்தில் நான் மருத்துவமனையில் இருக்கும் போது எதிரிகள் தொல்லை செய்தார்கள் என்று சொன்னேனா என்றால் SI புகார் வாக்குமூலம் பெற்ற பிறகு வரவில்லை. SI விசாரிக்கும் முன்பு எதிரிகள் தொல்லை கொடுத்திருந்தால் நான் புகார் வாக்குமூலத்தில் சொல்லியிருப்பேன் என்றால் சரியல்ல. புகார் வாக்குமூலத்தில் எந்த எதிரி, எந்த பொருளால் யாரை தாக்கினார்கள் என்று சொன்னேனா என்றால் கட்டை பாட்டில், ரீப்பர் கொண்டு வந்தார்கள் எல்லோரும் எங்களை அடித்தார்கள் என்று சொல்லியுள்ளேன். புகார் வாக்குமூலத்தில் யார் , யாரை மிரட்டினார் என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் மிரட்டினார்கள் என்று சொல்லியுள்ளேன். மேற்படி வெள்ளைச்சாமியும், நாங்களும் உறவினர்கள் என்றால் சரிதான். நான் சொல்வது போல் எதிரிகளால் காயம் ஏற்படவில்லை என்றாலும், வெள்ளைச்சாமி விவகாரத்தில் எதிரிகள் அரசு அலுவலங்களில் வெள்ளைச்சாமிக்கு ஆதரவாக புகார் கொடுத்து வந்ததால் சம்பவத்தில் சம்பந்தம் இல்லாத எதிரிகள் மீது பொய்புகார் கொடுத்தேன் என்றாலும் இல்லை. இடப்பிரச்சனை சம்பந்தமாக பைசல் பேசும் போது வாக்குவாதம் ஏற்பட்டு கைகலப்பு ஏற்பட்டதால் கீழே விழுந்த போது எனக்கு காயங்கள் ஏற்பட்டது என்றால் சரியல்ல. உண்மையில் எதிரிகள் வீட்டில் வந்து பிரச்சனை செய்திருந்தால் உடைந்ததாக சொல்லும் பொருள் விபரம் மற்றும் மதிப்பு சார்ந்து புகார் வாக்குமூலத்தில் சொல்லியிருப்பேன் என்றால் சரியல்ல வீட்டிற்கு

வந்தார்கள். எதிரிகள் மீது புகார் கொடுத்தால் வெள்ளைச்சாமி அரசு அலுவலகத்தில் புகார் கொடுப்பதை தடுத்து விடலாம் என்ற காரணத்தினால் பைசல் பேசும் போது ஏற்பட்ட காயத்தை வைத்து எதிரிகள் மீது பொய் புகார் கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும், இந்த வழக்கு சம்பவத்துக்கும் சம்பந்தமில்லை என்றால் சரியல்ல.

M PONPANDI

Digitally signed by M PONPANDI
Date: 2026.02.11 18:19:56 +0530

**நீதித்துறை நடுவர்,**
**பழனி.**

**நீதித்துறை நடுவர் நீதிமன்றம், பழனி**

**C.C. 524 of 2012** **Previous Date : 23-06-2019**
**20-06-2022**

**அரசு சாட்சி 2 செல்வன் த/பெ.வீரன் சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டார். மனுவின் பேரில் மீண்டும் அழைக்கப்பட்டு எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை.**

**1,2 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:**

**1. இந்த வழக்கு சம்பந்தமாக போலிசார் என்னை எங்கு எப்போது விசாரித்தார்கள் என்றால் பழனி அரசு மருத்துவமனையில் சிகிச்சையில் இருக்கும் போது விசாரித்தார்கள். அதற்கு பிறகு போலிசார் என்னை விசாரிக்கவில்லை என்றால் சரிதான். எனது சித்தப்பா மாரிமுத்து என்பவருக்கும், எங்கள் உறவினர் வெள்ளைச்சாமி என்பவருக்கும் அரசு தொகுப்பு வீடு கட்டுவதில் அளவீடு பிரச்சனை இருந்தது என்றால் இல்லை. மாரிமுத்துவும், வெள்ளைச்சாமியும் அளவீடு சம்பந்தமாக பிரச்சனையை வைத்து அரசு அலுவலகங்களில் எதிரெதிராக புகார் கொடுத்தார்கள் என்றால் இல்லை. மாரிமுத்துவுக்கும், வெள்ளைச்சாமிக்கும் பைசல் பேசிய பின்பு அதன் தொடர்ச்சியாக இந்த சம்பவம் நடந்தது என்று புகார் வாக்குமூலத்தில் சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். மாரித்துவுக்கும் , வெள்ளைச்சாமிக்கும் எந்த இடத்தில் யார் முன்னிலையில் பைசல் நடந்தது என்றால் பைசல் நடக்கவில்லை. எனக்கும், எனது அண்ணணுக்கும், எனது அப்பாவுக்கும் இந்த பிரச்சனைக்கு முன்பாகவே எதிரிகளை தெரியும் என்றால் ஆமாம் ஒரே ஊர் தான். இந்த வழக்கு சம்பந்தமாக போலிசார் பொருட்கள் எதுவும் கைப்பற்றினார்களா என்று தெரியுமா என்றால் தெரியாது. போலிசார் என்னை விசாரித்த போது எத்தனை பேர் அசிங்கமாக திட்டி தாக்கினார்கள் என்று எண்ணிக்கை குறிப்பிட்டு சொன்னேனா என்றால் ஆமாம். எத்தனை நபர்கள் என்று சொன்னேன் என்றால் 10-15 பேர் என்று சொன்னேன். நாங்களும், மாரிமுத்துவும், வெள்ளைச்சாமியும் உறவினர்கள் என்றால் சரிதான். எதிரிகள் இளையராஜா, பத்ரகாளி இரண்டு பேரும் வேறு சமூகத்தை சேர்ந்தவர்கள் என்றாலும் அவர்கள் இரண்டு பேரும் உறவினர்கள் என்றாலும் சரிதான். பிரச்சனை நடந்ததாக சொல்லும் நேரத்தில் எனது வீட்டில் பொருட்கள் எதுவும் பாதிக்கப்பட்டதா என்றால் ஆமாம். அவ்வாறு பொருட்கள் விபரத்தை போலிஸ் விசாரணையில்**

சொன்னேனா என்றால் ஆமாம். இந்த வழக்கு  சம்பவம் எத்தனை மணிக்கு நடந்தது என்றால் இரவு 10 மணிக்கு பிறகு நடந்தது. போலிஸ் விசாரணையில் யார் யாரை என்ன அசிங்கமான வார்த்தை சொல்லி திட்டினார் என்றும் யார் யாரை என்ன பொருளால் தாக்கினார் என்றும் குறிப்பிட்டு சொல்லியுள்ளேன் என்றால் ஆமாம். நான் போலிஸ் விசாரணையில் யார் யாரை என்ன அசிங்கமான வார்த்தை சொல்லி திட்டினார் என்றும் யார் யாரை என்ன பொருளால் தாக்கினார் என்றும் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றாலும் , நீதிமன்றத்தில் மிகைப்படுத்தி சொல்கிறேன் என்றாலும் சரியல்ல. போலிஸ் விசாரணையில் சக்திவேல் என்ற பெயரை சொல்லவில்லை என்றாலும் நீதிமன்றத்தில் தான் சொன்னேன் என்றாலும் சரியல்ல . போலிஸ் விசாரணையில் சொன்னேன். நான் போலிஸ் விசாரணையிலும், முதல் விசாரணையிலும் சொல்லியுள்ளது போல் எந்த சம்பவமும் நடைபெறவில்லை என்றாலும் , எனது சித்தப்பா மாரிமுத்துக்கும், வெள்ளைச்சாமிக்கும் இடையே இருந்த இடப்பிரச்சனை தொடர்பாக எதிரிகள் அரசு அலுவலகங்களில் புகார் கொடுப்பதற்கு வெள்ளைச்சாமிக்கு உதவியாக இருந்தார்கள் என்றால் ஆமாம். வெள்ளைச்சாமியை கட்டுப்படுத்த வேண்டுமென்றால் எதிரிகள் மீது வழக்கு பதிய வேண்டும் என்று எனது அண்ணன் பொய்யான புகார் கொடுத்துள்ளார் என்றாலும் அதற்கு ஆதரவாக நான் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. மருத்துவமனையில் சிகிச்சைக்கு சேரும் போது மருத்துவரிடம் என்னை தெரிந்த 50 நபர்கள் தாக்கினார்கள் என்று சொன்னேன் என்றால் சரிதான். வெள்ளைச்சாமிக்கும், மாரிமுத்து தரப்புக்கும் பைசல் பேசும் போது அதில் தள்ளுமுள்ளு ஏற்பட்டு எனக்கு காயங்கள் ஏற்பட்டது என்றாலும், எதிரிகள் காயம் ஏற்படுத்தவில்லை என்றாலும் சரியல்ல. எதிரிகளுக்கும், இந்த வழக்கு சம்பவத்திற்கும் தொடர்பு இல்லை என்றாலும் எதிரிகளால் காயம் ஏற்படுத்தபடவில்லை என்றாலும் சரியல்ல.

M PONPANDI

Digitally signed by M PONPANDI
Date: 2026.02.11 18:20:04 +0530

நீதித்துறை நடுவர்,
பழனி.

__நீதித்துறை நடுவர் நீதிமன்றம், பழனி__

__C.C. 524 of 2012__ **Previous Date : 23-06-2019**
__20-06-2022__

**அரசு சாட்சி 3 வீரன் த/பெ.பொட்டி சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டார். மனுவின் பேரில் மீண்டும் அழைக்கப்பட்டு எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை.**

__1,2 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:__

1. போலிசார் என்னை எங்கு வைத்து எப்போது விசாரித்தார்கள் என்றால் கோதைமங்களத்தில் வைத்து விசாரித்தார்கள். இந்த சம்பவத்திற்கு முன்பு எனதுதம்பி முறையான மாரிமுத்துவுக்கும், எங்கள் உறவினர் வெள்ளைச்சாமிக்கும் இடம் சம்பந்தமாக பிரச்சனை இருந்தது என்றால் சரிதான். மாரிமுத்துவும், வெள்ளைச்சாமியும் அரசு அலுவலகங்களில் மாறி மாறி புகார் கொடுத்தார்களா என்றால் அது எனக்கு தெரியாது. எதிரிகளை இந்த வழக்கு சம்பவத்திற்கு முன்பே தெரியும் என்றால் சரிதான் .மேற்படி இடப்பிரச்சனை தொடர்பாக சம்பவம் நடந்த தேதியில் பைசல் பேசினோம் என்றால் சரிதான். அந்த பைசல் பேசும் போது நானும், மாரிமுத்துவும், எனது மகன்கள் முத்துச்சாமி, செல்வம் ஆகியோரும் பைசல் பேசினோம் என்றால் சரிதான். அந்த பைசலில் சமரசம் எட்டப்படவில்லை என்றால் சரிதான். போலிசார் என்னை வீட்டிற்கு வந்து விசாரித்தார்களா என்றால் இல்லை. எங்கள் வீட்டில் இருந்த பொருட்களுக்கு சேதமாகவில்லை என்றால் சரியல்ல. எனது வீட்டில் எந்த பொருளும் சேதமாகவில்லை என்றாலும் சேதம் ஆகியிருந்தால் போலிஸ் விசாரணையில் சொல்லியிருப்பேன் என்றாலும் சரியல்ல. மருத்துவமனையில் மருத்துவரிடம் என்னை 50 தெரிந்த நபர்கள் தாக்கினார்கள் என்று சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். போலிஸ் விசாரணையில் யார் யாரை என்ன வார்த்தை சொல்லி திட்டினார் என்றும், யார் யாரை என்னபொருளால் அடித்தார் என்றும் யார் கொலை மிரட்டல் விடுத்தார் என்றும் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரியல்ல. மேற்படி வெள்ளைச்சாமிக்கு எதிரிகள் அரசு அலுவலகங்களில் புகார் கொடுக்க உதவி செய்தார்கள் என்றால் இல்லை. பைசல் முடிவு எட்டப்படாமல் இருந்த போது கைகலப்பு ஏற்பட்டு கீழே விழுந்து எனக்கும், அ.சா.1, அசா.2க்கும் காயம் ஏற்பட்டது என்றால் சரியல்ல. வெள்ளைச்சாமியை கட்டுப்படுத்த வேண்டுமென்றால் எதிரிகள் மீது வழக்கு பதிய

வேண்டும் என்று எனது அண்ணன் பொய்யான புகார் கொடுத்துள்ளார் என்றாலும் அதற்கு ஆதரவாக நான் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் சம்பந்தமில்லை என்றால் சரியல்ல. அ.சா.1 கொடுத்த பொய் புகாருக்கும் சாட்சியாக பொய்யாக சாட்சி அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

M PONPANDI Digitally signed by M PONPANDI Date: 2026.02.11 18:20:13 +0530

நீதித்துறை நடுவர்,
பழனி.